சிறப்பிதழ்
Special Issue

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr. A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S. Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr. M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr. M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

01 வைகாசி 2052
15th May 2021
ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

*Journal of*

# Modern Thamizh Research

(*A Quarterly International Multilateral Thamizh Journal*)

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

**Special Issue :** Multidisciplinary International Conference - 2021
Department of Tamil
Thiruvalluvar College
Papanasam, Tirunelveli District, Tamil Nadu, India

## Modern World Curriculum

*Special Issue Editors*
**Dr. A. Packiamuthu**

*Co-Editor's*
**Dr. R.Uma Devi** **Dr. S. Ganesan**
**Dr. S. Wilson** **Dr. P. Murugan**
**POST Dr. T. Mahalakshmi**

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

16 பகுதி-2 Part -2

Scanned by TapScanner

| | | | |
|---|---|---|---|
| 51. | மு.கவியரசன் & ஆ.முருகன் | சுப்ரபாரதிமணியன் சிறுகதைகளில் முரண்கள் | 301-308 |
| 52. | அ.கோ.ஸ்ரீதேவி | தமிழிசைப்பண்கள் | 309-313 |
| 53. | மா.ஜாஸ்மின் பிரியா | திருக்குறள் பார்வையில் அறிவாண்மை | 314-320 |
| 54. | இரா.முருகன் & இரா.அனுசுயா | நவீன உலகப்பாடத் திட்டம் | 321-325 |
| 55. | ஞா. லலிதா | அர்த்தமுள்ள இந்துமதத்தில் இல்லறக் கருத்துக்கள் | 326-328 |
| 56. | பா.எழில்செல்வன் & ஆ.ஜோசப் சகாயராஜ் | வள்ளுவரின் வழியில் வள்ளலார் | 329-333 |
| 57. | ஜா.குழந்தை தெரஸ் | 'தலைமுறைகள்' புதினத்தில் இனவரைவியல் கூறுகள் | 334-340 |
| 58. | கொ.அம்பேத்கார் & அ.பாக்கியமுத்து | சங்க இலக்கியங்கள் மனித நேயச் சிந்தனைகள் | 341-344 |
| 59. | அ.டெய்சி & அ.பாக்கியமுத்து | மனித வாழ்வும் கலைகளும் | 345-349 |
| 60. | ஜோ.ஜோசப்பின் ஜூலியட் | தமிழ் இதழியல் போக்குகளில் நவீனத்துவம் | 350-354 |
| 61. | மு.கவிதா | சிறுபணாற்றுப்படையில் தமிழர் பண்பாட்டியல் | 355-359 |
| 62. | ஜெ. சவிதா&பெ.சுமதி | சு.தமிழ்ச்செல்வி நாவல்களில் பெண்கள் | 360-366 |
| 63. | ஜெ.ஜெயபிரபா | கற்றல், கற்பித்தலில் புதிய சிந்தனைகள் | 367-371 |
| 64. | செ. ஷஜிபா | பா. விஜய்யின் காகித மரங்கள் கூறும் சமுதாயப் பதிவுகள் | 372-376 |
| 65. | பொ.கோகிலா | தமிழ் சிறுகதைகளில் புனைவியல் | 377-381 |
| 66. | இரா.வரலெஷ்மி | மணிவாசகரின் அறத்தொடுநிற்றல் | 382-386 |
| 67. | செ.ரவிசங்கர் | மேலாண்மை பொன்னுசாமி சிறுகதைகளில் சாதியக் கட்டமைப்பு | 387-392 |
| 68. | ஜே.அனிதா செல்வ ருபவதி | அகிலனின் வேலியும், பயிரும் வருணணைகள் | 393-396 |
| 69. | சு.அபிலா சுந்தரி | சித்தலிங்கையாவின் ஊரும் சேரியும் - தலித் சிந்தனைகள் | 397-402 |
| 70. | த.செல்வம் | தமிழ் இலக்கியங்களில் கூந்தல் | 403-413 |
| 71. | சி.முனியசெல்வி & ஐ. இந்திரா | திருமுருகாற்றுப்படையில் வழிபாட்டு முறைகள் | 414-420 |
| 72. | க.ஜோதிமுருகன் | ஆற்றுப்படை இலக்கியங்களில் கலைஞர்கள் | 421-425 |
| 73. | மு.ஜெகதீசன் | சிறுவெண் காக்கை கருப்பொருள் உணர்த்தும் உரிப்பொருள் | 426-431 |
| 74. | A. MEENACHI | PORTRAYAL OF PARENT -CHILD RELATIONSHIP IN ANITA DESAI'S 'CRY, THE PEACOCK' | 432-435 |
| 75. | S. கபாலி & இரா. கருணாநிதி | கலைஞர் மு. கருணாநிதி ஆற்றிய தமிழ்த்திரைப்பணி -ஓர் ஆய்வு | 436-441 |
| 76. | ச. கண்ணகி & க.லதா | சோ.தர்மன் படைப்புகள் உணர்த்தும் வேளாண் முறைகள் | 442-448 |
| 77. | கா.சரவணப்பாண்டி | பள்ளு இலக்கியங்களில் வேளாண் தொழில் சார் மரபுகள் | 449-453 |
| 78. | ஜே.ரா.ஹேனா லில்லி | குறள் மற்றும் நாலடியில் கல்வி | 454-458 |
| 79. | சு.பரணி | கம்பராமாயணமும் சரணாகதித் தத்துவமும் | 459-461 |
| 80. | ச. மாசிலா தேவி | இலக்கியங்களில் மருத்துவச் சிந்தனைகள் | 462-467 |
| 81. | எஸ். ஜான்ஸி ராணி | சங்க அக இலக்கியத்தில் உளவியல் | 468-472 |
| 82. | ந. இரகுதேவன் | இந்திய மொழிகளில் நாவல் இலக்கியத்தின் வளர்ச்சி | 473-477 |
| 83. | கா. செல்வகுமார் | உலக வளர்ச்சியில் இந்திய உயர்கல்வியின் பங்கு-ஒரு பார்வை | 478-482 |
| 84. | இரா.இந்துபாலா | ஆய்வு நோக்கில் தண்டியலங்கார அணிகள் | 483-485 |
| 85. | முருகு தயாநிதி | இலங்கையில் பாடசாலைக் கல்வி - ஓர் அறிமுகம் | 486-497 |
| 86. | இ. சுப்புலட்சுமி | பா.செயப்பிரகாசம் சிறுகதைகளில் கதைமாந்தர்கள் பண்பு | 498-501 |
| 87. | அ. குருசாமி | வாலியின் திரையிசைப்பாடல்களில் தாய்மை | 502-504 |
| 88. | A. BHAVANI | MODERN WORLD CURRICULUM | 505-508 |
| 89. | பெ. கண்மணி | பட்டினத்தார் ஞானப்பாடல்களில் உவமை | 509-517 |
| 90. | ஆர். முத்துராஜன் & வ. மரியசெல்வி | நாலு ரெண்டின் சமூகப் பார்வை | 518-521 |
| 91. | கோ. மாரிராஜா & மி.கவிதா | கண்ணதாசன் திரையிசைப் பாடல்களில் அகத்திணைக் கூறுகள் | 522-525 |
| 92. | செ.மேனகா | இலக்கியங்கள் கற்பித்தல் - நவீன பாடத்திட்டம் | 526-531 |
| 93. | ம.துரை & ஆ. சீனிவாசன் | ஆலைத் தொழிலும் அவல நிலையும் | 532-537 |
| 94. | ரா.சங்கரி& இரா.உமாதேவி | எட்டுத்தொகைப் புற இலக்கியங்கள் சுட்டும் அறப்போர் | 538-544 |
| 95. | சு.செல்லம்மாள் & அ. பாக்கியமுத்து | புதுக்கவிதையின் தோற்றம் வளர்ச்சி | 545-551 |
| 96. | ம. சித்ராகண்ணு | இலக்கியமும் சிந்தனைக்களமும் | 552-557 |
| 97. | செ. உமாதேவி | நவீன உலகப் பாடத்திட்டம் கற்றல் கற்பித்தலில் முத்தமிழ் | 558-565 |
| 98. | வெ.பார்த்திபன் & இரா.அந்தோணிராஜ் | தோல் புதினத்தில் பெண்ணியச் சிந்தனைகள் | 566-568 |
| 99. | செ. ரெஜினா | குறள் கூறும் அறநெறிச் சிறப்பு | 569-577 |
| 100. | சு.செங்குகுமார் & சு.உமா | பத்துப்பாட்டில் ஒகர ஈரெழுத்தொரு மொழி | 578-581 |
| 101. | சு.விஜயா கலைவாணி | அற இலக்கியங்களில் மகளிர் மாண்புகள் | 582-589 |
| 102. | அ. ராஜ மரகதம் | மகாபாரதம் காட்டும் விழுமக் கல்வி சிந்தனைகள் | 590-600 |


Published by : Raja Publications, No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : The Printing House, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

Scanned by TapScanner

# வள்ளுவரின் வழியில் வள்ளலார்

**பா.எழில்செல்வன்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத்துறை, தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி - 620 002

**முனைவர் ஆ.ஜோசப் சகாயராஜ்**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி - 620 002

**ஆய்வுக் சுருக்கம்:**

புதுஉலகைப் படைக்க விரும்பிய சான்றோர்களில் வள்ளுவரும், வள்ளலாரும் இன்றியமையாதவர்கள். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய சாதி சமய வருணப் பாகுபாடு, ஏழை பணக்காரர் என்ற வேற்றுமையற்ற, ஒரு புதிய சமுதாயத்தைத் தமது நூல்களில் படைத்துக் காட்டினார்கள். தன்னை வள்ளுவரின் வழித்தோன்றலாக அவர்தம் கொள்கையின் வாரிசாக அறிமுகப்படுத்திக் கொண்டார் வள்ளலார்.

''வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் நானும் ஒருவன்'' என்றார் வள்ளலார். மரணமிலாப் பெருவாழ்வு, பசிப்பிணி, உயிர்ப்பலி, புலால் உண்ணாமை சொல்லாட்சித்திறன் போன்றவற்றை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**கலைச் சொற்கள்:**

ஒப்புதல் - பாதுகாத்தல், துஞ்சுதல் - தூங்குதல், ஓவாப் பிணி - நீங்காத நோய், வேட்டல் - யாகம், பொச்சாப்பு - மறதி, சோர்வு, வைப்புழி - வைக்கும் இடம், அவி - வேள்வி பொருள், புலால் - மாமிசம், ஊன் - இறைச்சி, ஏதிலார் - பகைவர்.

## மரணமிலாப் பெருவாழ்வு:

பிறந்தவர் யாவர்க்கும் இறப்பு என்பது உறுதி. விஞ்ஞானமும் இதனை ஏற்றுக் கொள்கிறது. ஆனால் மனிதன் இறவாமல் வாழ்வது என்பது சாத்தியமே என்று மெய்ஞ்ஞானியான வள்ளலார் கூறுகிறார். "மரணம் நமது எச்சரிக்கையின்மையால் விளைவதாகும்'' என்கிறார் வள்ளலார்.

வள்ளலார் 'மரணமிலாப் பெருவாழ்வு' இருப்பதாகவும் அதனைப் பெற்றுவிட்டதாகவும் பிரகடனம் செய்தார். 'சாகாக் கல்வி' என ஒன்றிருப்பதாகக் கூறினார். அந்தச் சாகாக் கல்வியைத் தாம் பெற்றதும் திருவள்ளுவர் படைத்த திருக்குறளில் இருந்துதான் என்று கூறுகிறார்.

"தேவர் குறளில் முதல் அதிகாரத்தில் சாகாத கல்வியைக் குறித்து சொல்லியிருக்கிறது. அதனைத் தக்க ஆசிரியர் முகமாய்த் தெரிந்து கொள்ள வேண்டும்'' என திருவருட்பா உபதேசப் பகுதியில் வள்ளல் பெருமான் குறிப்பிடுகிறார்.

திருக்குறளின் முதல் அதிகாரம் 'கடவுள் வாழ்த்து' ஆகும். அதில்,

> "மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
> நிலமிசை நீடுவாழ் வார்" (திருக்குறள்: 3)

> "பொறிவாயில் ஐந்துவித்தான் பொய்தீர் ஒழுக்கம்
> நெறிநின்றார் நீடுவாழ் வார்"(திருக்குறள்: 6)

என்னும் குறட்பாக்களில் ஒவ்வொரு குறளிலும் இறுதியில் வந்துள்ள 'நீடுவாழ்வார்' என்னும் சொல் இறவாமல் நித்திய தேகத்துடன் என்றென்றும் வாழ்வார் என்று வள்ளலார் பெருமான் பொருள் கொள்கிறார்.



Scanned by TapScanner

வள்ளலார் பற்றி மா.பொ.சி அவர்கள் கூறும்போது மேற்கண்ட குறளுக்கான விளக்கத்தை மரணமில்லா பெருவாழ்வு என்கிற நோக்கில் வள்ளலாரைத் தவிர வேறு எந்த உரையாசிரியர்களும் கூறவில்லை என்கிறார்.

பசிப்பிணி:

பசி வந்திடப் பத்தும் பறந்து ஓடும் என்பது பழமொழி. அதுபோலப் பாரதத்தில் பட்டினிக் கொடுமையை நன்கு உணர்ந்த வள்ளுவர் பல இடங்களில் சுட்டிக் காட்டுகிறார். தனக்கு வேண்டிய பொருளை ஒருவன் சேகரித்து வைத்துக் கொண்டு பிறர் பசியில் வாடுவதை பார்த்துக் கொண்டு இருந்தால், அம்மனிதனை கொலைகாரன் என்பதை சுட்டிக்காட்டவே,

**"பகுத்துண்டு பல்லுயில் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"**
(திருக்குறள்: 322)

என்னும் குறட்பாவை 'கொல்லாமை' என்னும் அதிகாரத்தில் வைத்துள்ளார். பசிக்கொடுமை இல்லாத ஒரு நாட்டைப் படைக்க வள்ளுவர் விரும்புகிறார். ஆகையால் நாட்டிற்கான இலக்கணம் வகுக்கும்போது உறு பசியையும், ஓவாப் பிணியையும், செறுபகையையும் கூறுவார்.

**"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு"** (திருக்குறள்: 734)

வறுமையும் பசியும், அறிவையே கொன்று விடும் என்பதை வள்ளுவவப் பெருமான்,

**"பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக்-கொன் றாங்கு"**
(திருக்குறள்: 532) என்று கூறுகிறார்.

மேலும், நாம் சம்பாதிக்கும் பொருளை சேமித்து வைக்கக் கூடிய இடம் வங்கியல்ல, ஏழைகளின் வயிறு என்று குறிப்பிடுவதை,

**"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி"**
(திருக்குறள்: 226)

என்ற குறளின் மூலம் அறியலாம்.

வறுமை எவ்வளவு கொடியது என்பதை வள்ளுவர் கூறுகிறார். நெருப்பினுள்ளே விழுந்த ஒருவன் ஒருவேளை பிழைத்தாலும் பிழைத்துக் கொள்வான். ஆனால் பொல்லாத வறுமையில் விழுந்துவிட்ட எந்தப் பொருளும் இல்லாமல் அழிந்து விடும் என்பதை,

**"நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது"**
(திருக்குறள்: 1049)

என்ற குறட்பாவில் எடுத்துக் கூறுகிறார். இத்தகைய பொல்லா வறுமையை உணர்ந்தவர் வள்ளலார். இந்தக் கொடிய வறுமை காரணத்தால் உண்டான பசியைப் போக்க சத்திய தருமசாலையை 1867 ஆம் ஆண்டு வடலூரில் துவங்கினார். வள்ளுவரின் மரபில் தோன்றிய வள்ளலார் பல இடங்களில் வள்ளுவர் கருத்தை பிரதிபலிக்கிறார். தருமசாலை துவங்கும் போது தம் திருக்கரங்கலால் எழுதிய 'ஜீவகாருண்ய ஒழுக்கம்' என்ன என்பதை படித்துக் காட்டினார். அவற்றுள் சில பகுதிகள் வருமாறு,

"பசி என்கிற நெருப்பானது ஏழைகளின் தேகத்திலே பற்றி எரிகின்ற போது ஆகாரத்தால் அணைக்கிறது தான் ஜீவகாருண்யம்".
(திருஅருட்பா உரைநடைப்பகுதி பக்கம்: 123)

"தமது குடும்பச் செலவைக் கூடிய மட்டில் சிக்கனம் செய்து, ஏழைகளின் பசியை நீக்குதல் வேண்டும்".
(திருஅருட்பா உரைநடைப்பகுதி பக்கம்: 123)

உயிர்ப்பலி:

**தமிழ்மறை கூற வந்த திருவள்ளுவர்,
அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று"**
(திருக்குறள்: 259)

என்று கூறினார்.

ஆயிரம் கேள்வியை எதிர் நிறுத்தி என்றன் உயிரைக் கொல்லாமையை இணையாகக் காட்டி அவ்வேள்வியால் வரும் பயனைக் காட்டிலும் கொல்லாமை என்னும் விரதத்தால் வரும்



Scanned by TapScanner

பயனே பெரிது என்று நிலைநாட்டினார். கொல்லாமையை நிலைநிறுத்த வள்ளுவர் ஒரு அதிகாரத்தையே படைத்துக் காட்டினார்.

இத்தகைய தமிழ் மரபுவழி வந்த வள்ளலார் திருக்கோவில்களில் கடவுளின் பெயரால் உயிர்கள் கொல்லப்படுவதைக் கண்டு பயந்தேன் என்று பாடுகிறார்.

**"நலிதரு சிறிய தெய்வ மென் றையோ**
**நாட்டிலே பலபெயர் நாட்டிப்**
**பலிதர ஆடு பன்றிக்குக் குடங்கள்**
**பலிக்கடா முதலிய உயிரைப்**
**பொலிவுறக் கொண்டே போகவும் கண்டே**
**புந்தி நொந் துள நடுக் குற்றேக்**
**கலியுறு சிறிய தெய்வசிவங் கோயில்**
**கண்டகா கபத்திலும் பயிந்தேன்"**
- (திருவருட்பா 6/20: 59 பக்கம்: 96)

உயிர்கொலையை வெறுத்து, ஊனுணவை மறுத்துப் பாடிய வள்ளுவர் கூட பலியிடும் வழக்கத்தைக் கண்டிக்கவில்லை. ஆனால் ஒளிவு மறைவு இன்றி கண்டித்த பெருமை வள்ளலாரையே சாரும்.

"பசியினால் வரும் துன்பத்தையும் கொலையில் வருந்துன்பத்தையும் நிவர்த்தி செய்விப்பதே ஜீவகாருண்யத்திற்கு முக்கிய லட்சியமென்றறிய வேண்டும்" - (திருவருட்பா 6.:20: 59 பக்கம்: 109)

மேற்கண்ட வள்ளலாரின் 'ஜீவகாருண்ய ஒழுக்கம்' என்னும் செய்திகள் அடிப்படையில் வள்ளுவரை வள்ளலார் பின்பற்றி இருப்பதை அறிய முடிகிறது. இதுதவிர திருவருட்பாவிலும் பசிப்பிணி பற்றிய பாடல்கள் நிரம்ப உள்ளன. அவற்றுள் சில பகுதிகள்,

**"உள்ளேன் உடையார் உண்ணவும் வறியர்**
**உறுபதியுழந்து வெந்துயரால்**

**.......................................................**

**கொள்ளலேன் உணவும் திரிக்கிலேன் இந்தக்**
**குறையெலாம் தவிர்த்தருள் எந்தாய்"**
- (திருவருட்பா 6/110: 32 பக்கம்: 341)

**"வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்**
**வாடினேன் பசியினால் இளைத்தே**
**வீடுதோ றிரந்தும் பசியறாது அயர்ந்த**
**வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்"**
- (திருவருட்பா 6/20: 58 பக்கம்: 96)

புலால் உண்ணாமை:

திருவள்ளுவர் புலாலுண்ணும் ஒழுக்கத்தை மனித சமுதாயத்தில் இருந்து ஒழிக்க விரும்பினார். இருப்பினும் ஞானிகளுக்கே புலால் உண்ணாமையை அழுத்தமாகப் போதித்தார்.

**"பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை அருளாட்சி**
**ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு"**
(திருக்குறள்: 252)

**"தன்ஊன் பெருக்குதற்குத் தான்பிறி தூண்உன்பான்**
**எங்ஙனம் ஆளும் அருள்"** (திருக்குறள்: 251)

**"கொல்லன் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிரும் தொழும்"**(திருக்குறள்: 260)

என்னும் குறட்பாக்கள் மூலம் மெய்யுணர்வு பெற விரும்பியவர்களுக்கே புலாலுண்ணாமையின் அவசியத்தைப் போதித்தது புலனாகும்.

ஆனால் வள்ளலார் உலக மக்கள் அனைவரையும் புலால் தவிற்கும்படி வேண்டிக் கொள்கிறார்.

**"வன்புலால் உண்ணும் மனிதரைக் கண்டு**
**மயங்கி உள் நடுங்கிஆற் றாமல்**
**என்பலாம் கருக இளைத்தனன் ..."**
(திருவருட்பா 6/20:37 பக்கம்: 93)

பேதமை உணர்வு இருக்கக் கூடாது என்று விரும்பியவர் வள்ளலார். கொல்லாமை புலால் மறுத்தல் என்ற கொள்கையை பின்பற்றாதவர்களிடம் பிரிவினை வாதம் காட்டுகிறார். புலாலுண்ணாதவர் எல்லாம் உறவினத்தர் என்று உண்ணுவோரெல்லாம் புறவினத்தார் என்றும் பிரிவினை செய்கின்றார்.



Scanned by TapScanner

"உயிர்க் கொலையும் புலைப்பசிப்பும் உடையவர்கள் எல்லாம்
உறவினத்தார் அல்லர் அவர் புற இனத்தார் அவர்க்குப்
பயிர்ப்புறுமோர் பசிதவிர்த்தல் மாத்திரமே புரிக ..."
- (திருவருட்பா 6/37:71 பக்கம்: 156)

என்று பாடுகின்றார்.

புலாலுண்பவர்களைப் புறவினத்தாராகக் கூறினாலும், அவர்பால் இரக்கம் கொண்டு, "அவர்க்கும் பசி தவிர்த்தல், மாத்திரமே புரிக" என்று பரம்பொருள் தமக்கு ஆணையிட்டதாக அறிவிக்கின்றார்.

**வள்ளுவர் - வள்ளலார் சொல்லாட்சித்திறன்:**

வள்ளுவர் பயன்படுத்திய சொல்லாட்சியை வள்ளலார் பல இடங்களில் பயன்படுத்தி வருகிறார். அவற்றிற்கு சான்றாக முதல் திருமுறையில் வள்ளலார் எழுதிய 'நெஞ்சறி வுறுத்தல்' மூலம் அறியலாம். நெஞ்சறி வுறுத்தல் என்பது கலிவெண்பாவால் எழுநூற்றைந்து கண்ணிகளைக் கொண்டது. தன் நெஞ்சக்குத் தானே அறிவு கூறிக்கொள்வதாக அமையும்.

"ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு"
- (திருக்குறள்: 190)

என்பது குறள் வாக்கு.

தன்நெஞ்சைப் பார்த்து 'நெஞ்சே நீ திருவள்ளுவர் போதித்த திருக்குறள் நெறிப்படி வாழ்வாயாக' என்று கூறுகின்றார். குறள் வழியில் வாழாத தமது நெஞ்சைக் கடிந்துக் கொள்கிறார்.

வள்ளுவர் கூறிய,

"கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வன்
போக்கும் அதுவிளிந் தற்று"
- (திருக்குறள்: 332)

என்ற குறட்பாவை வள்ளலார்,

"கூத்தாட் டவைசேர் குழாம்விளிந்தாற் போலுமென்ற
சீர்த்தாட் குறள்மொழியும் தேர்ந்திலையே"
- (திருவருட்பா - 1/3:433 பக்கம்: 57)

என்று திருவருட்பாவில் கூறுகிறார்.

வெகுளாமை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர்

"செல்லா விடத்துச் சினந்தீது சொல்லிடத்தும்
அல்அதனின் தீய பிற" - (திருக்குறள்: 302)

இக்குறளின் கருத்தை தன்நெஞ்சிடம் 'தெண்ணிலையே' என்று வள்ளலார் கேட்கிறார்.

"செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்லதனில் தீயதென்ற தெண்ணிலையே"
- (திருவருட்பா 1/3:433 பக்கம்: 57)

சினம் ஒரு மனிதனை அழித்துவிடும் என்பதை வள்ளுவர்,

"தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்"
- (திருக்குறள்: 305)

என்ற குறட்பாவில் சினத்தின் தீதினை வள்ளுவர் எடுத்துரைத்துள்ளார்.

இக்கருத்தை அடியொற்றி வள்ளலார்,

"தன்னைத்தான் காக்கின் சினங்காக்க என்றதனைப்
பொன்னைப்போல் போற்றிப் புகழ்ந்திலையே"
- (திருவருட்பா: 1/3:434 பக்கம்: 57)

திருவருட்பாவில் பாடியுள்ளார்.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை"
- (திருக்குறள்: 151)

என்னும் குறளை உணர்ந்து தம்நெஞ்சை தெளிவாயாக என்று,



Scanned by TapScanner

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை"
- (திருவருட்பா: 1/3:435 பக்கம்: 57)

என்ற திருவருட்பா வரிகளில் வள்ளலார் கூறுவதை காணலாம்.

வள்ளலார் குறட்பாவை கையாண்ட திறமை போற்றத் தக்கதாகும். திருக்குறளில் அவர் தோய்ந்திருப்பதை அறியலாம். மேலும் இதுபோன்று பல சான்றுகள் வள்ளலார் திருவருட்பா மற்றும் உரைநடைப்பகுதிகளில் காணலாம்.

## தொகுப்புரை:

- நீடுவாழ்வார் என்னும் சொல்லுக்கு வேறு எந்த உரையாசிரியர்களும் கூறாத புதிய விளக்கத்தை வள்ளலார் கூறினார். மரணமில்லா பெருவாழ்வு என்ற விளக்கத்தின் மூலம் புதிய செய்தியை தந்துள்ளார்.
- 'அழிபசி' என்று வள்ளுவர் சொன்ன பசிப்பிணியை தன் மார்க்கத்தின் கொள்கையாக கொண்டார் வள்ளலார். பசிப்பிணியை போக்குவதே கடவுள் வழிபாட்டு முறை என்பதை உணர்த்தி, சத்திய தருமசாலை தோற்றுவித்தார்.
- உயிர் கொலையை வெறுத்து, ஊனுணவை மறுத்துப் பாடிய வள்ளுவர் கூட பலியிடும் வழக்கத்தைக் கண்டிக்கவில்லை. ஆனால் துணிவுடன் அச்செலை கண்டித்தார் வள்ளலார் என்பதை உணரலாம்.
- புலால் மறுத்தல் என்னும் கொள்கை துறவிகளுக்கு மட்டமே என அழுத்தமாக கூறினார். ஆனால் உலக மக்கள் அனைவரும் பின்பற்ற வேண்டும் என்றார் வள்ளலார். இதன்மூலம் ஆன்மநேய ஒருமைப்பாடு என்ற புதிய கொள்கையை நிலை நிறுத்தியவர் வள்ளலார்.
- வள்ளுவர் பயன்படுத்திய சொல்லமைப்பையும், கருத்தையும், வள்ளுவரின் வழித்தோன்றலாக நின்று வள்ளலார் கையாண்டுள்ளார். இக்கருத்தின் அடிப்படையில் வள்ளலார் திருக்குறளில் தோய்ந்தவர் என்பது வெளிப்படுகிறது.
- வள்ளலார் குறட்பாக்களை வள்ளலாரின் அருட்பாக்களோடு ஒப்பு நோக்கினால் முன்னது மூலம் பின்னது உரை என்பதை இக்கட்டுரை வாயிலாக நாம் அறியும் செய்திகளாகும்.

**துணை நின்ற நூல்கள்:**

1. இராமலிங்க சுவாமிகள், திருஅருட்பா (முதல் ஐந்து திருமுறை), அருட்பா பதிப்பகம், மேட்டுக்குப்பம், முதற்பதிப்பு, 2017.
2. இராமலிங்க சுவாமிகள், திருஅருட்பா (ஆறாம் திருமுறை), அருட்பா பதிப்பகம், மேட்டுக்குப்பம், முதற்பதிப்பு, 2017.
3. இராமலிங்க சுவாமிகள், திருஅருட்பா உரைநடைப்பகுதி, திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையம், வடலூர், பதினொன்றாம் பதிப்பு, 2018.
4. சிவஞானம்.ம.பொ, வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, ஏழாம் பதிப்பு, 2010.
5. சிவஞானம்.ம.பொ, திருக்குறளிலே கலை பற்றிக் கூறாததேன்?, பூங்கொடி பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 1974.
6. இராமலிங்கம்.வெ, திருக்குறள் தெளிவுரை, தென்றல் நிலையம், சிதம்பரம், இரண்டாம் பதிப்பு, 2003.
7. ஒளவை நடராசன், வாழ்விக்க வந்த வள்ளலார், திருக்குறள் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 2009.

♦♦♦



Scanned by TapScanner